2019 ஜூலை 18]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரியில் உள்ள சிப்காட் பற்றி ஒரு கேள்வியை முன்வைத்தார். தருமபுரி சிப்காட்டில் 950 ஏக்கர்* Revenue Department Land identify *செய்திருக்கிறோம். நிச்சயமாக அந்த இடத்தைக் கையகப்படுத்தி,* first phase, second phase *என்று வரும். நிச்சயமாக முதற்கட்டமாக* Revenue Department land-*ஐக் கையகப்படுத்தி,* within three months *நாங்கள்* first phase *செய்வதாக இருக்கிறோம்.* Second phase–*க்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடந்திருக்கிறது.* 3(1) notification, 3(2) notification *கொடுத்திருக்கிறோம், அந்த* process delay *ஆகிறது. அதை நிறுத்திவிட்டு,* first phase *மட்டும் உடனடியாக, 950 ஏக்கர்* identify *செய்திருக்கிறோம். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், உடனடியாக நிறைவேற்றித் தரப்படும். 950 ஏக்கர்* Revenue Department land-*ஐ கையகப்படுத்தி, அதை உடனடியாக நிறைவேற்றித் தருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். மேற்கொண்டு தனியார் இடத்தைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறது.* Special Officer *நியமனம் செய்திருக்கிறோம். வேலை கொஞ்சம் கணக்கமாக இருக்கிறது. அந்தப் பணியையும் அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

136—

கால்நடை மருத்துவமனை

***4409—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கம்மம்பள்ளியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2019 ஜூலை 18

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், கம்மம்பள்ளி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,340 உள்ளதால், கம்மம்பள்ளியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு, கால்நடை மருத்துவமனையை நேரடியாகத் துவக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன், கால்நடை மருந்தகம் செயல்பட்டால் மட்டுமே, அதனைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலும். எனவே, அரசின் கொள்கை முடிவின்படி, புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவங்கும் திட்டம் இடம்பெறும்பொழுது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கம்மம்பள்ளி கிராமத்திற்கு கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணகிரி ஒன்றியம், கம்மம்பள்ளி கிராமத்தைச் சுற்றி பல்வேறு ஊராட்சிகள் மற்றும் 40–க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. அங்கு கால்நடை தொழில் என்பது பிரதான தொழிலாக இருக்கிறது. கிராமப் பொருளாதாரத்தில் கால்நடையின் பங்கு என்பது கிட்டத்தட்ட 50 சதவீதப் பங்காக இருக்கின்றது. ஆக, அப்படி இருக்கின்ற அந்தச் சூழ்நிலையில், கம்மம்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி–கொப்பம், ஆந்திரா செல்கின்ற main சாலையில் அமைந்திருக்கிறது. ஆகவே, அந்தக் கிராமத்தைச் சுற்றி கிட்டத்தட்ட 50–க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. கால்நடைகள் ஏராளமாக வளர்க்கப்பட்டு வருகின்ற பகுதியாக அது இருக்கிறது. அந்தப் பகுதியில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட அலகுகள் இருக்கின்றன. ஒரு கால்நடை மருந்தகத்திற்குச் செல்லவேண்டுமென்று சொன்னால் 8 கிலோ மீட்டரும்,*

2019 ஜூலை 18]

கால்நடை கிளை நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 6 கிலோ மீட்டர் தொலைவிற்கும் செல்ல வேண்டும். ஆகவே, அப்படி இருக்கின்ற சூழ்நிலையில், கம்மம்பள்ளி அரசு விதிகளுக்குட்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், கம்மம்பள்ளியில் ஒரு கால்நடை கிளை நிலையத்தை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றபோது, மருத்துவமனை வேண்டுமென்று கேட்ட காரணத்தினாலேதான், அதற்குண்டான பதிலைச் சொல்ல வேண்டியுள்ளது. ஏற்கெனவே, கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு மூன்றாயிரம் அலகுகள் மட்டும் இருந்தால் போதும், ஆனால், அங்கே 5,340 அலகுகள் உள்ளதாக எங்களுக்குச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட, கிருஷ்ணகிரி ஒன்றியம், கம்மம்பள்ளிக்கு கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு சாத்தியகூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கம்மம்பள்ளி கிராமத்தில் மட்டுமல்ல, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பாக்கம் ஒன்றியத்திலே பையூர், ஜெகதாப், கரடிஅள்ளி, பூவத்தி, வெலகலஹள்ளி உள்ளிட்ட எல்லா கிராமங்களிலும் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் ஈடுபட்டிருக்கிற தொழில் கால்நடைத் தொழில். அப்படியிருக்கக்கூடிய சூழ்நிலையில், அங்குள்ள மக்கள் 8 கி.மீ., 10 கி.மீ., 20 கி.மீ. தூரத்திற்கு கால்நடைகளைப் பிடித்துக்கொண்டுபோய், மருத்துவம் பார்க்க வேண்டிய ஒரு*

TRUTH ALONE TRIUMPHS

சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, நான் குறிப்பிட்டுள்ள கிராமப் பகுதிகளில், விதிமுறைகளுக்குட்பட்டு, கிட்டத்தட்ட 7, 8 கால்நடைக் கிளை நிலையங்கள் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, கம்மம்பள்ளி மற்றும் ஏற்கெனவே நான் குறிப்பிட்ட பையூர், ஜெகதாப், கரடிஅள்ளி பகுதிகளில் எல்லாம் 10 கி.மீ. தொலைவிற்கு மாடுகளைக் கொண்டுபோய் மருத்துவம் பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு விதிமுறைகளுக்குட்பட்ட அந்தப் பகுதிகளில் கால்நடைக் கிளை நிலையங்களை அமைத்துத் தருவது அவசியம். இதைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பணிவுடன் கேட்டறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் இன்றைக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். அந்த வகையில், கடந்த ஆண்டில் மட்டும் 125 கால்நடைக் கிளை நிலையங்களையும், 100 கால்நடை மருந்தகங்களையும் நாங்கள் கொடுத்துள்ளோம். அந்த வகையில், அரசாணை எண் 200, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 10–10–2018–ன்படி, நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட, பச்சிகானப்பள்ளி கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. மேலும், அரசாணை எண் 9, கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2018–ன்படி, கே. மோட்டூர் மற்றும் ஜீனூரில் புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இன்றைக்கு பல்வேறு கிராமங்களிலே கால்நடைகளின் வளர்ப்பு அதிகமாக இருப்பதால், அங்கெல்லாம் கால்நடைக் கிளை நிலையங்கள் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, எந்தப் பகுதிகளிலெல்லாம் கால்நடைக் கிளை நிலையங்கள் தேவைப்படுகின்றன என்பதை அறிய, எங்களுடைய துறை

2019 ஜூலை 18]

அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பரமத்தி-வேலூர் தொகுதிக்குட்பட்ட வடகரை ஆத்தூர் ஊராட்சி, வடகரை ஆத்தூரில் அனைத்து விதிமுறைகளுக்கும் உட்பட்டு, கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான முன்மொழிவுகள் இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அனுப்பப்பட்டது. அதன்படி, வடகரை ஆத்தூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டும். கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் ஒரு துணை வினா கேட்ட போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரமத்தி ஒன்றியம், கொண்டரசம்பாளையத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதையும் சேர்த்து இந்த ஆண்டே அமைக்க முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 125 கால்நடைக் கிளை நிலையங்களைக் கொடுக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்காமலேயே பரமத்தி-வேலூர் தொகுதியில் 3 கால்நடைக் கிளை நிலையங்களை நாங்கள் கொடுத்தோம். அதன் பிறகு, கடந்த ஆண்டு கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று மீண்டும் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டும் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்குமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*